# எம்.ஜி. சுரேஷின் சோதனை முயற்சிகளும் ஜாலியான நாவல்களும்

ந. முருகேசபாண்டியன்

1982-ஆம் ஆண்டில் தி.ஜானகிராமன் இயற்கையெய்தியபோது, தினமணி நாளிதழில் உள்ளங்கையில் அடங்குகிற அளவில் சிறிய செய்தி, தகவலாகப் பிரசுரமாகியிருந்தது. அப்புறம் சில சிறுபத்திரிகைகளில் சில வாக்கியங்களில் இரங்கல் செய்தி, சில வாரங்கள் மாதங்கள் கழித்து வெளியானது. இன்று முகநூல் உள்ளிட்ட வலைத்தளத்திலும், பிற அச்சு ஊடகங்களிலும் மறைந்த எழுத்தாளர் பற்றி விரிவான தகவல்கள் உடனுக்குடன் வெளியாவது, சூழலில் ஏற்பட்டுள்ள மாற்றம். படைப்பாளர் உயிரோடு இருக்கிறவரையிலும் அவருடைய எழுத்துகள் குறித்து, விமர்சனக் கட்டுரை எதுவும் வெளியிடாத பத்திரிகைகள், அவர் இறந்தவுடன், ''அய்யகோ.. இமயம் சரிந்தது'' என்றரீதியில் சோகம் ததும்பிட எழுதப்படுகிற கட்டுரைகளைப் பிரசுரிக்கின்றன. சரி, போகட்டும். ''ஒரு படைப்பாளியைப் பற்றிச் சொல்ல அவருடைய படைப்புகளே போதும்'' என்ற ஜப்பானியத் திரைப்பட மேதை அக்கிர குரோசாவா சொன்ன வாசகம், என் மனதில் எப்பவும் நிழலாடும். அண்மையில் நண்பர் எம்.ஜி.சுரேஷ் அகாலமான தகவல் அறிந்தவுடன் ஏற்பட்ட வருத்தத்துடன், அவருடைய நாவல்கள் பற்றி விரிவான கட்டுரையை அவர் வாழுங்காலத்தில் எழுத முயன்று தள்ளிப்போனது, மனதில் உறுத்தலாக இருக்கிறது. இளங்கோ மறைந்து இரண்டாயிரமாண்டு கடந்த பின்னரும் சிலப்பதிகாரம் பற்றிய பேச்சுகள் நிலவுவது, படைப்பாளிக்குப் பெருமை என்ற நிலையில், எம்.ஜி.சுரேஷ் எழுதிய நாவல்கள் பற்றிக் கதைப்பதுதான் அவருக்குப் பெருமை சேர்ப்பதாகும் என நம்புகிறேன்.

2004-ஆம் ஆண்டில் சுரேஷின் படைப்புகள் குறித்து நண்பர் சுதீர் செந்தில் திருச்சி மாநகரில் ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் பேசும்போது, அவருடைய நாவல்கள், வெகுஜனரீதியிலும் பிரபலமாக வேண்டியவை எனக் குறிப்பிட்டது நினைவுக்கு வருகிறது. எனது உரையினால் ஆத்திரமடைந்து என்னுடன் சண்டையிட்ட சுரேஷ், பின்னர் அதற்கான காரணங்களையும் நியாயங்களையும் தனிப்பட்ட பேச்சில் விளக்கியபோது, எனது கருத்தை ஏற்றுக்கொண்டார். நாவல் வாசிப்பது என்பது பொழுதுபோக்கு, விநோத உலகில் பயணித்தல், அனுபவங்கள் உருவாக்கிடும் மனஉணர்வில் திளைத்தல் போன்றவற்றுடன் தொடர்புடையது. தமிழைப் பொருத்தவரையில் செயற்கைக்கோள் தொலைக்காட்சி தொடர்கள் பிரபலமாவதற்கு முன்னர் நாவல் வாசிப்பு என்பது பரவலாக இருந்தது. குறிப்பாகப் பெண்கள் முனைப்புடன் தேடிப் போய் நாவலை வாசிப்பதன்மூலம் அடைந்த மகிழ்ச்சி அளவற்றது. பொதுவாக வெவ்வேறு வடிவங்களிலும் வெளிப்பாட்டுக் கதைசொல்லல் முறைகளிலும் வெளியாகிற நாவல்கள், வாசகரை முடிவற்ற உலகினுக்கு இட்டுச் செல்கின்றன; குதூகலிக்கச் செய்கின்றன. இத்தகைய பின்புலத்தில் சுரேஷின் நாவல்களை அணுகுவதற்கு சாத்தியமுண்டு. சுரேஷ், தொடக்கம் முதலாகவே மொழியின் வழியாக வேறுபட்ட காட்சிகளையும் சூழல்களையும் கதையாக்குவதில் தொடர்ந்து ஆர்வம் கொண்டிருந்தார். ஒவ்வொரு நாவலையும் சோதனை முயற்சியாக எழுத முயன்றது, அவருடைய படைப்பாளுமையின் வெளிப்பாடாகும். ஏதோவொரு கோட்பாட்டுப் பின்புலத்தில் எழுதுவதாக சுரேஷ் தனது நாவல்களில் குறிப்பிட்டிருப்பது, எனக்கு வேடிக்கையாகத் தோன்றும். கியூபிச நாவல், தன்பெருக்கி நாவல், தோற்றநிலை மெய்மை நாவல், பல குரல்களின் நாவல், வகைமை மீறும் நாவல் போன்றவை சுரேஷின் நாவல்கள் பற்றிய குறிப்புகளாகப் புத்தகங்களில் இடம் பெற்றிருக்கின்றன. இதுபோன்ற குறிப்புகளைப் புறந்தள்ளிவிட்டு, வாசகர்கள் தங்கள் விருப்பம்போல நாவல்களை வாசிப்பதுதான் சரியானது என்று கருதுகிறேன். இத்தகைய குறிப்புகள் ஒருவகையில் சுரேஷின் நாவல்களை இயல்பாக அணுகுவதற்கு தடையாக விளங்கின; சக படைப்பாளர்களில் சிலருக்கு எரிச்சலைத் தந்தன. காரிகை கற்றுக் கவிதை பாட முடியாது என்ற தமிழர் மரபில் வந்த சுரேஷின் புதிய நாவலாக்கச் செயல்பாடுகள், ஒருவகையில் சவால்தான். மேலைநாடுகளில் வெளியான கோட்பாடு சார்ந்த நாவல்களைப் பின்பற்றிச் சுரேஷும் தனது நாவல்களை உருவாக்கியது, தமிழிலும் அதுபோன்ற நாவல்கள் உருவாக வேண்டுமென்ற அக்கறையின் விளைவாகும். மற்றபடி, புதிய உத்திகளை வைத்துக்கொண்டு நாவலாக்கத்தில்

பம்மாத்து பண்ணுவது, சுரேஷின் நோக்கமல்ல. பொதுவாக ஒவ்வொரு நாவலும் வாசிப்பில் தருகிற அனுபவமும், வாசகன் உருவாக்கிக்கொள்கிற பிரதியும்தான் முக்கியம். சுரேஷின் புதிய வகைப்பட்ட படைப்பு ஆர்வமும் கதைசொல்லலும் பெரிய அளவில் நவீன இலக்கியச் சூழலில் தாக்கத்தை ஏற்படுத்தாதது, துரதிர்ஷ்டம். புது முறையிலான படைப்பு முயற்சி என்பது, தமிழுக்கு அவசியம் என்ற அடிப்படையில் அவருடைய நாவல்கள் வரவேற்கப்பட வேண்டியனவாகும்.

எம்.ஜி.சுரேஷின் நாவல்கள்: அட்லாண்டிஸ் மனிதன் மற்றும் சிலருடன்(1999), அலெக்ஸாண்டரும் ஒரு கோப்பைத் தேனீரும்(2000), சிலந்தி(2001), யுரேகா என்றொரு நகரம்(2002), 37(2003), தந்திர வாக்கியம்(2016).

சுரேஷின் முதல் நாவலாகிய அட்லாண்டிஸ் மனிதன் மற்றும் சிலருடன் வெளியானபோது, 'இந்த நாவல் தமிழ், இந்திய அடையாளங்களைமீறி மூன்றாவது உலக நாவலாக உயர்ந்து நிற்கிறது என விமர்சகர் கோவை ஞானி சொன்னது, கவனத்திற்குரியது. நாவல் என்றால் துல்லியமான ஒழுங்கு நெறிமுறைகளுடன், வரையறுக்கப்பட்ட பாத்திரங்களுடன் செறிந்திருப்பது, ஒரு சொல்கூட ஓங்கி ஒலிக்காமல், படைப்பாளி ஒதுங்கியிருப்பது போன்ற வழமையான தமிழ் நாவல் போக்கினைச் சுரேஷின் புதிய நாவல், கவிழ்த்திப் போட முயன்றுள்ளது. கதைக்குள் கதையாக விரிந்திடும் விக்கிரமாதித்யன் கதை மரபில் மனித வாழ்க்கையின் பன்முகத் தன்மைகளைப் பதிவாக்கிட முயன்றுள்ள சுரேஷின் எழுத்தாக்கம், தனித்துவமானது. கதையை மூவர் தொடர்ந்து சொல்கிற போக்கினில், கதைசொல்லியான ஆசிரியரின் இடம் கேள்விக்குள்ளாகியுள்ளது. நாவல் என்ற பரந்த கேன்வாசில், பன்னிரண்டு சிறுகதைகள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. அவை ஒவ்வொன்றும் வேறுபட்ட வாழ்க்கைச்சூழலை மையப்படுத்தினாலும், மனிதர்கள் இப்படியெல்லாம் ஏன் தன்னிருப்பைச் சிதலமாக்குகிறார்கள் என்ற கேள்வி வாசிப்பில் தோன்றுகிறது. பூமிக்குள் இருந்து வெளியே வந்த அட்லாண்டிஸ் மனிதன், தனது டெலிபதி ஆற்றலால் எதிரில் இருக்கிற கதைசொல்லியின் மனவோட்டத்தை அவதானிக்கிற இயல்புடையவன். ஏற்கனவே கே எழுதிய நாவலின் ஓர் அத்தியாயத்தில் இடம் பெற்றிருந்த பாத்திரங்களான குலோத்துங்கனும் கமலேசனும், பிரதியில் இருந்து வெளியேறிக் கொல்லிமலைக்குச் உல்லாசப் பயணம் செல்வது, கதையினை வேறு தளத்திற்கு நகர்த்துகிறது. சுரேஷின் கதைசொல்லல் காரணமாக எது புனைவு எது நிஜம் என்பது அழிந்து, வாசகன் எதையும் நம்பத் தொடங்குவது இயல்பாக மாறுகிறது. போர்ஹேயின் புதிர் எழுத்துப்போல அட்லாண்டிஸ் மனிதன் அழைத்துச் செல்லுமிடத்தில், ஏற்கனவே நாவலில் சொல்லப்பட்டுள்ள பன்னிரு கதைகளின் வேறு வகையான முடிவுகள் அடங்கிய பிரதிகள் இருக்கின்றன. இது எப்படி சாத்தியம் என வாசகன் யோசிப்பதற்குள், முடிந்து போனதாகக் கருதப்படுகிற கதையின் இரு வேறு புதிய முடிவுகளை விவரிக்கிற பிரதிக்குள் மூழ்கிட நேரிடுகிறது. இதுவரை ஒரு கதையின் ஒற்றை முடிவெனப் படைப்பாளி சித்திரிப்பதை மாற்றி, வாசகன் தனக்கான புதிய முடிவைக் கதைப் போக்கில் உருவாக்கிட இயலும் என்பதை சுரேஷ் நுட்பமாக வலியுறுத்த முயலுகிறார். வெகுஜன வாசகர்கள் வாசிப்பதற்கேற்ற வகையில், விறுவிறுப்புடன் நகர்கிற கதையாடல் முழுக்க, சமகால அரசியல், சமூகம் குறித்த ஆழமான கேள்விகள் முடிவற்று விவாதிக்கப்பட்டுள்ளன. காத்திரமான இலக்கியப் பிரதியாகவும் கதையாடலை வாசிப்பதற்கான சாத்தியங்கள், நாவல் விவரிப்பில் பொதிந்துள்ளன. நாவலின் பிரதியானது, எது உண்மை? எது பொய்? என்ற கேள்விகளின் ஊடாகச் சாத்தியப்பாடுகளின் பன்முக அம்சங்களை முன்னிலைப்படுத்துகிறபோது, மனிதன் காலங்காலமாக நம்பிக்கொண்டிருக்கிற யதார்த்த வாழ்க்கையின் மேன்மையும், இருப்பின் கையறுநிலையும் அபத்தமாகின்றன. க்யூபிசம் போல பல்வேறுபட்ட சாத்தியங்களை வாசிப்பின் மூலம், வாசகன் தனக்கான பிரதியை உருவாக்கிட முடியுமென்ற நிலையில், சுரேஷ் சோதனைரீதியில் எழுதியுள்ள அட்லாண்டிஸ் மனிதன் மற்றும் சிலருடன் நாவல், எடுத்துரைப்பியல் முறையில் இன்றும் தனித்து விளங்குகிறது.

அலெக்ஸாண்டரும் ஒரு கோப்பைத் தேனீரும் நாவல், வரலாற்றை முழுக்கக் கலைத்துக் காலவெளியில் முன்னும் பின்னும் பயணிப்பதற்கான வெளியை உருவாக்கியுள்ளது. தமிழர் x சிங்களவர் இடையிலான இனமோதல் காரணமாக இலங்கையில் பெற்றோரை இழந்து, அகதியாகக் கிளம்பிய அலெக்ஸாண்டரின் துயரங்கள், புலம்பெயர்ந்திடும் நாடுகளிலும் தொடர்கின்றன.

மாசிடோனியாவில் இருந்து படைபலத்துடன் புறப்பட்டு எதிர்த்தவர்களைக் கொடூரமாகக் கொன்றுகுவித்து, சாம்ராஜியத்தை நிறுவிய மகாஅலெக்ஸாண்டரின் ஆதிக்க அரசியல் பின்புலத்தைச் சித்திரிக்கிற கதைகள், உலக வரலாற்றின் வலியைப் பேசுகின்றன. இருத்தலின் நிச்சயமின்மையினால் அவதிப்படுகிற அலெக்ஸ் என்ற பிம்பம், கடந்த காலம் என்ற வன்முறையும், எதிர்காலம் என்ற பேரழிவுகளும் நிரம்பித் ததும்பிட, நாவலின் கதையாடல் தன்னிச்சையாக விரிந்துள்ளது. நான்கு காலகட்டத்தைச் சார்ந்த அலெக்ஸாண்டர்கள் என்ற புனைவு, அதிகாரத்தின் பிடியில், மனிதகுலம் எப்படியெல்லாம் தொடர்ந்து சீரழிவை எதிர்கொண்டு வந்தது.்.வருகிறது.்.வரப்போகிறது எனக் காத்திரமான அரசியலை முன்வைத்துள்ளது. கிரேக்க ரோமானியப் பேரரசுகள் காலகட்டம் முதலாக அதிகாரம், ஆட்சி, புகழ், வீரம் போன்றவற்றுக்காக நடந்த போர்களில் கொல்லப்பட்ட ஆண்கள், பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்ட பெண்கள் எண்ணிக்கைக்குக் கணக்கேது? இன்று இலங்கை, பாலஸ்தீனம், குர்திஸ்தான், ஆப்கானிஸ்தான், ஈராக், சிரியா போன்ற நாடுகளில் ஏதோவொரு காரணத்தை முன்னிறுத்தி நடைபெறுகிற போர்களின் பின்புலத்தில் ஏகாதிபத்திய நாடுகளின் தீவிரமான பேரழிவு ஆயுதவிற்பனை நடைபெறுகிறது. இன்னொருபுறம் அணு ஆயுதங்கள் குவிப்பின் விளைவாக ஒருக்கால் உலகப்போர் மூண்டால், இந்தப் பூமியே மனிதர்கள் வாழத் தகுதியற்றதாகிவிடும் என நாவல் எச்சரிக்கிறது. சுவராசியமான மொழியில் புனைந்துரைக்கப்பட்டுள்ள மகாஅலெக்ஸாண்டர் கதையை முன்வைத்துச் சுரேஷ் கட்டமைத்திட முயலுவது, முழுக்க அரசியல் சார்ந்த கேள்விகள்தான். எகிப்திய ஸ்பிங்ஸ், பிரமிடு எனத் தொன்மங்கள் மூலம் ஒரே அலெக்ஸாண்டர் பல அலெக்ஸாண்டர்களாகப் பெருக்கிக்கொள்வது, கதையை மாய உலகினுக்குள் இட்டுச்செல்கிறது. விநோதமான சம்பவங்களைத் துப்பறியும் நாவல் பாணியில் விவரிக்கிற கதை, திடீரெனச் சமூக நாவல், வரலாற்று நாவல், மாந்திரிக நாவல் என உருமாறி, தொடர்ச்சியறு முறையில் வாசகருடன் நேரடியாக உறவாடுகிறது. அமைப்பு என்பதே பன்முகத்தன்மை கொண்டதாகப் பல்வேறு பொருண்மைகளில் விளிம்பு மையம் என்ற முரணில் சிக்குண்டுள்ளதைப் பல்வேறு சம்பவங்கள், பாத்திரங்கள், உத்திகள் மூலம் விவரித்துள்ள அலெக்ஸாண்டரும் ஒரு கோப்பைத் தேனீரும் நாவல், காத்திரமான அரசியல் பிரதியாகும்.

எனது பதின்பருவத்தில் துப்பறியும் திகில் மர்மம் நிரம்பிய நாவல்களை உற்சாகத்துடன் வாசித்த அனுபவம்தான், பின்னர் கல்கியின் பக்கம் என்னை இழுத்துப்போனது. பொன்னியின்செல்வன் நாவலில் நிலவறைகளும் மந்திராலோசனைகளும் அரசியல் சதிகளும் வாசிப்பில் தந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. அன்றாட வாழ்க்கையில் புதிரான சம்பவத்தை எதிர்கொள்கிறபோது, அது எப்படி நிகழ்ந்தது என மீண்டும்மீண்டும் யோசிப்பது நடைபெறும். இலக்கியப் படைப்பில் துப்பறியும் சாகசத்தைக் காட்டிட முடியாது என்ற பொதுப்புத்தி தமிழகத்தில் வலுவாக நிலவிய காலகட்டத்தில், சுரேஷ், மேலை நாவல்களின் பாணியில் எழுதிய சிலந்தி நாவல் குறிப்பிடத்தக்கது. வெறுமனே துப்பறிதல் என்ற எல்லைக்குள் முடங்கிடாமல், அரசியல், மொழி அரசியல், உளவியல், இலக்கியம் என வேறுபட்ட பேச்சுகளின் வழியாக நாவலின் கதைப்போக்கினைப் புதிய தளத்திற்கு நகர்த்தியுள்ள சுரேஷின் கதைசொல்லல் சுவாரசியமானது. கதைசொல்லியான நாவலாசிரியர், நாவலின் தொடக்கம் முதலாக வாசகனைத் துப்பறிவாளனாக முன்னிறுத்திச் சொல் விளையாட்டைத் தொடங்குகிறார். நாவலின் வரிகளுக்குள் பயணிக்கிற வாசகன், தன்னைத் துப்பறிவாளனாக நினைத்துக்கொண்டு, தீவிரமாகக் கொலையாளியைத் தேடத் தொடங்கிடும் வேடிக்கை நிகழ்கிறது. மனநலக் காப்பகத்தில் நோயாளிகள் தொடர்ந்து கொலை செய்யப்படுவதைக் கண்டறிவதற்காகப் பயணப்படுகிற வாசகன் ஆண் அல்லது பெண்ணாக இருக்கலாம் என்ற சாத்தியத்தில் இருவேறு பிரதிகள் கட்டமைக்கப்பட்டுள்ளன. ஏழு பிணங்கள் வரிசையாகக் கிடத்தப்பட்டிருக்கிற பிணவறையில் மருத்துவர் சலீமை முன்னிறுத்தி, வாசகரைத் துப்பறிவாளராக மாற்றி உரையாடுவதில் தொடங்குகிற நாவல், தொடச்சியறு நிலையில் வெவ்வெறு பிரதேசங்களில் பயணிக்கிறது. இடையில் இடையீடு எனக் குறுக்கிடும் பகுதிகள், காத்திரமான முறையில் புதிய பிரச்சினைகளை விளக்க முயலுகின்றன. மனநோயாளியான அரூபன், பெண் எழுத்தாளர் ஃபெலீஸ் மீதான காதலுக்காகத் தீவிரமான சிறுபத்திரிகைகாரனாக உருமாறுகிறான். எல்லாவற்றையும் க்ளிஷே எனப் புறக்கணித்து, நவீன இலக்கியப் பிரதியைப் புரியாத மொழியில் கட்டமைத்த அரூபன், காதலி கைவிட்டதால் உளவியல் சிக்கலுக்குள்ளாகிறான். இறுதியில் 'சாம்பல் தூவிய புத்தகம்' என விநோதமாக எழுதத் தொடங்கியவன், மனநலக் காப்பகத்தில் இருந்தான் என சுரேஷ் சொல்கிற கதை, தீவிர இலக்கியச்

சூழல் குறித்த பகடியாகும். மனநலக் காப்பகத்தின் நூலகத்தில் கிடைத்த சிலந்தி என்ற பைங்கிளிக் கதையில் பிரதியிலிருந்து வெளியேறிய டி.எஸ்.பி. எப்படி ஒவ்வொரு கொலைகளாகச் செய்தார் என்ற விவரிப்பு, கதைக்குள் கதையாக விரிகிறது. சாதாரணமான துப்பறியும் நாவலான சிலந்தி, தீவிர இலக்கியவாதியான அரூபனுக்குப் பிடித்தது எப்படி என்று தோன்றுகிறது. சக்தி என்கிற சக்திவேல் என்கிற சக்திதாசன் பெற்றோரின் புறக்கணிப்பினால் சுயமிழந்து, இந்துத்துவ அடிப்படைவாதியாகி, கொலைகள் செய்து, இறுதியில் மனநோய்க்குள்ளாகி, மனநலக் காப்பகத்தில் அடைக்கப்படுகிறான். ஒற்றையான துப்பறியும் கதையில், கிளை பிரிந்திடும் பல்வேறு சம்பவங்களைத் தொகுத்து, வாசிப்பில் ஈர்ப்பினை ஏற்படுத்தியுள்ள சுரேஷின் நாவலாக்கத்தில் சோதனை முயற்சி பொதிந்துள்ளது. வெள்ளைத் தாள்களில் தடவப்பட்ட கறுப்பு மசியிலான வரிகளுக்குள் பயணிக்கிற வாசகர்கள், தோற்ற மெய்மை (Virtual Reality) நிலையில் புதிய உலகில் இருப்பதாகக் கருதுகிற சுரேஷ், விளையாட்டைத் தொடங்குகிறார். அலகிலா விளையாட்டில் மரபான வாசகன் என்ற பிம்பம் சிதலமாகி, விபரீதமான சாத்தியப்பாடுகளுக்குள் சிக்கிடுவதைச் சிலந்தி நாவல் சித்திரித்துள்ளது.

யுரேகா என்றொரு நகரம் என்ற நாவல் வரலாற்றின் புனைவுகளின் வழியாக நிலவும் சமூக மதிப்பிடுகளைக் கேள்விக்குள்ளாக்குகிறது. வரலாறு என்பது காலந்தோறும் ஆதிக்கவாதிகளின் விருப்பங்களை நிறைவுசெய்கிற வகையில், அற்புதமான பொய்கள் கலந்து எழுதப்படுகிறது என்ற கருத்தியலின் வழியாகச் சுரேஷ் புனைந்திடும் புனைவுகளின் தொகுதிதான் நாவலாக வெளியாகியுள்ளது. அந்தமான் தீவுக்கருகில் கடலுக்கடியில் புதிதாகக் கண்டறியப்பட்ட பழமையான நகரத்தைக் குறித்து ஆய்வு செய்திட முயலும் ஐந்து ஆய்வாளர்கள் பற்றிய கதைக்குப் பின்னால் பொதிந்திருக்கிற மர்மங்கள், சர்வதேச அரசியல்தான் நாவலின் மையம். தமிழரான அழகிய சிங்கர் என்ற கதைசொல்லி, லத்தீன் அமெரிக்காவைச் சார்ந்த ஜூலியானா, அமெரிக்காவிலிருந்து மைக்கேல், இங்கிலாந்திலிருந்து ஆலிஸ், ரஷியனான வாஸ்யா ஆகிய ஐவரும் அகழ்வாராச்சியில் தேர்ந்த வரலாற்றாய்வாளர்கள். பின்நவீனத்துவம் சொல்வதுபோல ஒற்றை வரலாறு அல்ல; பல வரலாறுகள் இருக்கின்றன என்பதற்கேற்ப, ஆதிக்க அரசியலுக்குச் சார்பாக உருவாக்கப்படுகிற வரலாற்றின் இன்னொரு பக்கத்தை நாவலின் வழியாகச் சுரேஷ் சித்திரித்துள்ளார். தமிழக அரசியல்வாதியான சோழராஜனின் திராவிட உன்னதம், உத்திரப் பிரதேசத்து இந்துத்துவ அரசியல் அடிப்படைவாதியான ரணபீ தரண் சிங்கின் ஆரிய மேன்மை என இந்தியச் சூழலின் அரசியல் அதிகாரத்தைச் சுரேஷ் விமர்சிக்கிறார். சிந்துச் சமவெளி அகழ்வாராய்ச்சியில் கிடைத்த முத்திரையில் இருப்பது குதிரை என நிறுவிட முயலுகிற போலி வரலாற்றாய்வாளர்களின் செயல்களுக்குப் பின்னால் இந்துத்துவா அரசியல் பொதிந்துள்ளது. ஊடகங்கள் தகவமைத்திடும் இன்றைய வாழ்க்கையின் மறுபக்கத்தில் புனைவின் வரையறை தகர்ந்திடுவது அறியாமல், ஆதிக்கத்திற்குச் சார்பான உடல்கள் தயாரிக்கப்படுகின்றன. வரலாற்றை உருவாக்கிட முயலுகிற அதிகார வர்க்கத்தின் விருப்பத்துக்கும் நலன்களுக்கும் சார்பாக உருவாக்கப்படுகிற வரலாறு குறித்த கேள்விகளை வாசிப்பின் வழியாக நாவல் வாசகர்களிடம் எழுப்புகிறது. 'வரலாறு என்கிற புனைவு உருவாக்கப்படும் சாத்தியம் ஒன்றை எனது அறிவுக்கெட்டியவரையில் இந்தப் பிரதியில் எழுத முயன்றிருக்கிறேன்' என நாவலின் முன்னுரையில் குறிப்பிடுவது, சுரேஷின் அரசியல் வெளிப்பாடாகும். வரலாறு என்ற ஒற்றைச் சொல்லின் வழியாகப் புனைவைக் கட்டமைத்துச் சுரேஷ் உருவாக்கியுள்ள யுரேகா நகரம் பற்றிய விவரணைகள், நாவல் என்ற வடிவத்தில் இருந்து விலகி, நிகழ்காலச் சம்பவங்களை விவரிப்பதில் மெல்லிய பகடி தொனிக்கிறது. ஹாலிவுட் திரைப்படத்தின் சம்பவங்கள் போல விரிந்திடும் நாவல் எனவும் கதையாடலை வாசிக்கலாம்.

'பல குரல்களில் (Polyphony) ஓர் அறிவியல் புனைகதை' என்ற சூசிகையுடன் வெளியாகியுள்ள சுரேஷின் 37 நாவல், விநோதமான சம்பவங்களின் வழியாகப் பல்வேறு புறக்காட்சிகளின் தொகுப்பாக விரிந்துள்ளது. நாவலாசிரியரான எம்.ஜி.சுரேஷ் சொல்வதாகத் தொடங்கிடும் நாவலில் வரும் நரேந்திரன் முதலாகக் கதையாடல் உயர்திணையினரின் குரலாக வெளிப்படுகிறது. திடீரென இக்கட்டான நேரத்தில் உயிருக்கு ஆபத்து நேரலாம் என்ற சூழலில், அ.்.றிணைப் பொருட்கள் உற்சாகத்துடன் கதை சொல்கின்றன. நாட்டார் மரபில் விக்கிரமாதித்யன் கதையில் சடப் பொருட்கள், இஷ்டம் போலக் கதைப்பது போல சுரேஷ் சொல்கிற கதைகள், அழுத்தமானவை. இது போன்று நாவலின் போக்கில் பொதிந்திருக்கிற வேறுபட்ட குரல்களைப் பற்றிச் சொல்வதால், 37 ஒரு

Polyphony நாவல் எனப் புத்தகத்தில் பதிப்பகத்தினர் குறிப்பிடுவது பொருத்தம்தானா? ஒருக்கால் பொருத்தம் இல்லாவிட்டால்தான் என்ன? மிகையுணர்ச்சி இல்லாத, வாசகனைத் தற்காலிக மனச்சிதைவு நோய்க்குள்ளாக்காத, கவித்துவ படிமங்கள் அற்ற, விலகி நின்று எளிய மொழியில், தட்டையாகச் சொல்லப்பட்டுள்ள சைபர் கோணத்திலான எழுத்து முறையில் 37 நாவல் எழுதப்பட்டுள்ளது என்ற குறிப்பு, வாசகனைப் பிரதியை விட்டுத் தள்ளிவைக்கிறது. பூமியில் குடும்ப நிறுவனத்தின் வலுவான பிடியில் சிக்கித்தவிக்கிற மனிதர்கள், லோன் கிரகத்தில் இயந்திரங்களின் ஆளுகையில் சிதலமாகியிருக்கிற மனிதர்கள் என இரு வேறு முரண்களின் வழியாக நாவல் எப்புகிற கேள்விகள் முக்கியமானவை. அணுத்துகள்கள், பிரபஞ்சவெளி, க்வாண்டம் இயற்பியல், புழுத்துளை, பிரபஞ்ச பயணம், காலம் போன்ற நவீன அறிவியலை முன்னிலைப்படுத்தி எழுதப்பட்டுள்ள 37 நாவல், அடிப்படையில், மனித இருப்புக் குறித்த ஆழமான விசாரிப்புகளைக் கோருகிறது. லோன் கிரகத்தில் இருந்து தப்பித்து வந்த 'கா' கைது செய்யப்படுவதைத் தடுப்பதற்காக 1001 இரவில் சொல்லப்பட்ட அரேபியக் கதைகள் போல முடிவற்று நீள்கிற கதை வெளியில் பேனா, புகைப்படம், கணினி, குறுந்தகடு, பிணம், பிளாட், சமையலறை, படுக்கையறை போன்றன தத்தம் வாழ்வில் கண்டறிந்த சம்பவங்களைக் கதைகளாகச் சொல்கின்றன. அறிவியல் புனைகதை என்ற பின்புலத்தில் சொல்லப்பட்ட கதைக்குத் தரப்பட்டுள்ள அறிமுகம், ஒருவகையில் சுயேச்சையான வாசிப்பினுக்குத் தடையாக உள்ளது. மற்றபடி விண்வெளி பற்றிய புதிர்களை நாட்டார் பாணியில் விவரித்துள்ள சுரேஷின் புனைவு முயற்சி, சராசரி வாசகருக்கும் உற்சாகம் அளிப்பதாகும்.

பன்னிரு ஆண்டுகள் மௌனத்திற்குப் பின்னர் சுரேஷ் எழுதிய தந்திர வாக்கியம் நாவல் சித்திரிக்கிற நிலவெளிக் காட்சிகள் முக்கியமானவை. வரலாற்று நாவல் போல பரந்துபட்ட கதைக்களத்தில் நுணுக்கமான தகவல்களுடன் விவரிக்கிற சுரேஷின் மொழி ஆளுகை வியப்பளிக்கிறது. தகவல் தொடர்பு நிறுவனத்தில் பணியாற்றுகிற நிகண்டன் தனது வேலைத்தளத்தில் எதிர்கொள்கிற அனுபவங்கள் ஒருபுறம், இரண்டாயிரமாண்டுகளுக்கு முன்னர் சீனாவில் இருந்து கிளம்பிய புத்தத்துறவியான ஜாங்கின் இந்தியப் பயண அனுபவங்கள் இன்னொருபுறம் என இரு வேறு தளங்களில் சொல்லப்பட்டுள்ள கதைவெளியானது, முழுக்கப் புனைவில் ததும்புகிறது. சங்க காலகட்டத்தில் மதுரையை ஆண்ட களப்பிரர்கள், வைதிக சமய நெறிகளுக்கு எதிரானவர்கள் என்ற வரலாற்றுத் தகவலின் பின்புலத்தில் சுரேஷ் விவரிக்கிற கதையாடல், நுண்ணரசியல் சார்ந்தது. இன்று ஐ.டி. கம்பெனியில் பணியாற்றுகிறவனின் பெயரான நிகண்டன் என்பது களப்பிரர் மன்னரின் பெயர் என்ற தகவல், கதையை வேறு தளத்திற்கு மாற்றுகிறது. பௌத்தத் துறவியான ஜாங் புத்தர் சொன்னதாக நம்பப்படுகிற மந்திர வாக்கியத்தின் பொருளைத் தேடிப் பயணிக்கிறார் என்பது சுவராசியமானது. காந்தாரத்தில் புத்தருக்கும் வைதிகரான பரத்வாஜருக்கும் இடையில் நடைபெற்ற விவாதத்தில் மந்திரம் என வைதிக சமயம் உச்சரிப்பதற்கு மாற்றாகத் தந்திரம் என்ற சொல் முன்வைக்கப்படுகிறது. பிரபஞ்சத்தில் நிலவுகிற இருளும் ஒளியும் ஒன்றையொன்று சார்ந்தது என்ற நிலையில் உலகமானது இரட்டை எதிர் நிலைகளால் ஆனதால் ஏற்படுகிற முரண்பாடுகள்தான் உலகை இயங்க வைக்கின்றன என்ற புத்தரின் தந்திர வாக்கியம் தான் நாவலின் மையமா? இந்தியத் தத்துவ மரபின் தொடர்ச்சியாக இன்று மேலாதிக்கம் செலுத்துகிற வைதிக சமய நெறியைக் கேள்விக்குள்ளாக்குவதற்கு சுரேஷிற்கு புத்த துறவியின் பயணக் கதை பயன்பட்டுள்ளது. அதேவேளையில் ஐ.டி.கம்பெனிகளில் சுரண்டப்படுகிற இளைஞர்கள் எதிர்கொள்கிற துயரங்களுக்குத் தீர்வாகவும் கதையாடலின் வழியாகச் சுரேஷ் முன்வைதுள்ள உட்டோப்பியன் தீர்வு கவனத்திற்குரியது. ஒற்றையாகச் சொல்லப்படுகிற கதைசொல்லலுக்கு மாற்றாக வேறுபட்ட சாத்தியங்களைப் புனைவின் வழியாகக் கட்டமைத்துள்ள சுரேஷ், வெறுமனே பொழுதுபோக்கினுக்காக நாவல் எழுதவில்லை என்பதை மந்திர வாக்கியம் மீண்டும் நிரூபித்துள்ளது.

ஆறு நாவல்களையும் ஒட்டுமொத்தமாக வாசிக்கும்போது, இடதுசாரி அரசியல் பின்புலத்தில் விவரிக்கப்பட்டுள்ள தமிழர் பண்பாடு, வாழ்க்கை குறித்த தேடல்களாகச் சுரேஷின் அக்கறையைப் புரிந்துகொள்ளலாம். இடைவிடாத பேச்சுகளின் வழியாகக் கதையாடலில் முடிவற்ற கேள்விகளை வாசிப்பில் உருவாக்குவது, சுரேஷின் படைப்பு நோக்கமாக உள்ளது. பொதுவாகக் கதைசொல்லல் அல்லது சோதனை முயற்சி என இரு வேறு நிலைகளில் சுரேஷின் நாவல்களை அணுகிடலாம். தமிழ்ச் சமூகம் குறித்த அக்கறையுடன் தமிழர்களின் சமகாலத்தை விமர்சனத்திற்குள்ளாக்கிடும்

போக்கு, சுரேஷ் எழுதியுள்ள நாவல்களில் காத்திரமாகப் பொதிந்துள்ளது. மரபான நிலையில் ஆண் பெண் உறவு, குடும்பம் எனக் கதைக்கிற சுரேஷ், ஒருநிலையில் புதிய உலகினுக்கு வாசகரை இட்டுச் செல்கிறார். அதேவேளையில் சுயேச்சையான கட்டற்ற பாலியல் சுதந்திரம் என்ற நிலைக்கு மாற்றாக நிலவும் தமிழ்ச் சமூக மதிப்பீடுகளின் உன்னதம் குறித்துச் சுரேஷ் அக்கறை கொண்டிருப்பது, நாவல்களில் வெளிப்பட்டுள்ளது. இன்று மனிதர்கள் பணம், புகழ், காமம், ஆன்மீகம், திரைப்படம் எனத் தங்களின் அடையாளத்தையும் இருப்பினையும் தொலைக்கிற சூழல் குறித்த எதிர்மறையான கருத்துகளைக் கதையாடலில் விவரிப்பது, சுரேஷின் நாவல்களில் பொதுவான அம்சமாக உள்ளது. பண்டைய வரலாற்றில் பதிவாகியுள்ள சம்பவங்கள் குறித்த விவரிப்புடன், ஈழப் போராட்டம் உள்ளிட்ட சமகாலப் பிரச்சினைகள், எதிர்காலத்தில் அறிவியலின் விளைவுகள் எனச் சுரேஷ் சித்திரிக்கிற படைப்புத்தளம் முடிவற்று விரிந்துள்ளது. பொதுவாக வெறுமனே சோதனைரீதியில் வித்தியாசமாக எழுதுவது, வடிவரீதியில் குழறுபடியாகப் புனைவைக் கட்டமைப்பதற்காகச் சுரேஷ் நாவல்களை எழுதவில்லை. சுரேஷின் பரந்துபட்ட ஆங்கில நாவல்களின் வாசிப்பு அனுபவமும், அவர் கண்டறிந்திட்ட மேலை நாவல்களில் இடம்பெற்றுள்ள சோதனை முயற்சிகளும், தமிழ் நாவலாசிரியர்கள் இதுவரை பயணிக்காத புதிய பிரதேசத்திற்குள் நாவல்களின் கதையாடலை இழுத்துச் சென்றுள்ளன. கதைகளின் வழியாக மனித இருப்பின் முடிவற்ற சாத்தியங்களைக் கண்டறிந்திட சுரேஷ் முயலுகிறாரா என்ற கேள்வி தோன்றுகிறது. இறுக்கமான மொழியில் மங்கலான உருவகங்களுடன் செறிவூட்டப்பட்ட நவீன இலக்கியப்பிரதிகள், கொண்டாடப்படுவதை நன்கறிந்திருந்த சுரேஷ், ஜாலியான மொழியில் உற்சாகத்துடன் கதைகள் சொன்னதுதான் அவருடைய தனித்துவம்.

எம்.ஜி.சுரேஷ் 1999-இல் தொடங்கி ஆண்டுதோறும் ஒரு நாவல் எனத் தொடர்ந்து ஐந்து மாறுபட்ட நாவல்களை எழுதியபோதிலும் ஏன் அவருடைய எழுத்துகள் பிரபலமடையவில்லை என்பது முக்கியமான கேள்வி. சுந்தர ராமசாமி, ஞானி, அசோகமித்திரன், ஜெயகாந்தன், தமிழவன் போன்ற மூத்த படைப்பாளிகள் சுரேஷின் சோதனை முயற்சி எழுத்துகளை வரவேற்று எழுதியிருப்பது, கவனத்திற்குரியது. அதேவேளையில் அன்றைய காலகட்டத்தில் உத்வேகத்துடன் படைப்புகளை உருவாக்கிட முயன்றுகொண்டிருந்த ஜெயமோகன், சாருநிவேதிதா, எஸ்.ராமகிருஷ்ணன் போன்றவர்களின் ஆளுகைக்கு முன்னர், ஏனோ சுரேஷின் வெற்றிக்கொடி உயரப் பறக்கவில்லை. அதிலும் இணையத்தில் வலைத்தளம் பெருகி, புதிய வகைப்பட்ட தமிழ் வாசகர்கள் உருவான சூழல் குறித்து அக்கறையற்ற சுரேஷின் செயல்பாடும், தனது எழுத்துகளுக்கான லாபியைச் கட்டமைக்காததும் அவர் இலக்கியப் பரப்பில் இருந்து ஒதுங்கிப் போனதற்கான காரணங்களா? யோசிக்கும்வேளையில் சுரேஷின் எழுத்துகள் ஒதுக்கப்பட்ட சூழலில், அவர் தொலைக்காட்சி தொடர்கள், திரைப்படக் கதையாக்கம் என ஒதுங்கித் தன்னையே ஒதுக்கிக்கொண்டார் எனத் தோன்றுகிறது. பதின்மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் சுரேஷ் எழுதிய தந்திர வாக்கியம்(2016) நாவலில் 'பல ஆண்டுகளாக எழுதுவது எப்படி என்பது பிடிபடாமல் சும்மா இருந்தேன். எழுதாமல் விட்டு விடலாமா என்றுகூடத் தோன்றும்.' எனக் குறிப்பிடுவது வாக்குமூலம் அல்ல. படைப்பாளி என்ற நிலையில் தீவிரமான இலக்கியச் சூழலில் சுரேஷ் எதிர்கொண்ட புறக்கணிப்பு தந்த கசப்பான உணர்வின் எதிர்விளைவுதான், எழுதாமல் ஒதுங்கியதற்கான காரணமாக இருக்கமுடியுமா? எப்படியானாலும் இந்தக் கட்டுரை எழுதுவதற்காக சுரேஷின் நாவல்களை மீண்டும் ஒருமுறை வாசித்தபோது எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியும் உற்சாகமும் நிஜமானவை. பின்நவீனத்துவம் குறிப்பிடுகிற பிரதி தரும் இன்பத்தைச் சுரேஷின் நாவல்கள் வாசிப்பில் நிச்சயம் உங்களுக்கு அளிக்கும். நாவல் என்ற வடிவத்தின் மூலம் சுவராசியமான கதைகளைப் புனைந்துள்ள சுரேஷின் படைப்புகள், வெகுஜன வாசகர்களின் கவனத்திற்குச் சென்று சேர வேண்டியது அவசியம். வழமையான தமிழ் நாவல்களிலிருந்து விலகிப் புதிய வகைப்பட்ட நாவல்களை உருவாக்கியதில், சுரேஷின் சோதனை முயற்சிகளில் சில வெற்றியடையாவிட்டாலும், அவர் வகுத்த புதிய பாதைகள் கவனத்திற்குரியதாகி, இலக்கிய வரலாற்றில் என்றும் நிலையான இடம் பெறும். மரபான முறையில் சொல்வதெனில், முயல் வேட்டையில் வெல்வதைவிட யானை வேட்டையில் தோற்பதைச் சுரேஷ் உற்சாகத்துடன் ஏற்றுக்கொண்டார் எனச் சொல்லலாம். தமிழ்ப் புனைவிலக்கியப் பரப்பில் வேறுபட்ட முறைகளில் புனைவுகளைப் பதிவாக்கியுள்ள சுரேஷின் ஜாலியான நாவல்கள், எதிர்காலத்தில் இளம் தலைமுறை வாசகர்களை ஈர்த்திடும் ஆற்றல் மிக்கவை.